# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 28, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

i. தில்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது போலீஸார் வரம்பு மீறிய நடவடிக்கை மேற்கொண்டது குறித்து மத்திய அரசு விளக்கமளிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடத்திய அமளிக்கிடையே, 'பொதுத் தேர்வு முறைகேடுகளைத் தடுக்கும் சட்டத் திருத்த மசோதா 2026 என்ற இந்த மசோதாவை பிரதமர் அலுவலகத்துக்கான இணையமைச்சர் ஜிதேந்திர சிங் அறிமுகம் செய்தார்.

ii. தொடர் அமளி காரணமாக, மசோதா மீது விவாதம் எதுவும் நடத்தப்படாமல் அவை நடவடிக்கைகள் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

iii. இந்த மசோதாவின்படி, வினாத்தாள் கசிவு அல்லது தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுபவர்களுக்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரையும் சிறைத் தண்டனை வழங்கப்படும். அதனுடன், ரூ.50 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும்.

iv. திட்டமிட்டு தேர்வு முறைகேடு தொடர்பான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.10 கோடி வரை அபராதமும் விதிக்கப்படும்.

v. வினாத்தாள் கசிவு அல்லது தேர்வு முறைகேடுகள் தொடர்பான வழக்கு விசாரணையை விரைந்து மேற்கொள்ள வசதியாக, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் விரைவு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். அதற்காக, எந்தவொரு அமர்வு நீதிமன்றத்தையும் சிறப்பு விரைவு நீதிமன்றமாக மாற்றியமைக்க அனைத்து மாநில அரசுகளுக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

vi. இந்த விரைவு நீதிமன்றங்களில் வழக்கு மீது உடனடியாக விசாரணை தொடங்கி தினசரி அடிப்படையில் மேற்கொள்வதோடு, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த 3 மாதங்களுக்குள் விசாரணை முடிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

vii. மேலும், வினாத்தாள் கசிவு, விடைத்தாள்களில் (ஓஎம்ஆர் சீட்) முறைகேடு செய்தல், போலியான வலைதளங்கள் மூலம் ஏமாற்றுதல், போலியான தேர்வறை நுழைவுச் சீட்டை வழங்குதல் உள்பட தேர்வு முறைகேடு தொடர்பான 15 வகையான குற்றச் செயல்கள் மசோதா வில்பட்டியலிடப்பட்டுள்ளன.

viii. கடந்த 2024-ஆம் ஆண்டு ஜூன் மாதம் அறிவிக்கை செய்யப்பட்ட பொதுத் தேர்வு முறைகேடுகளைத் தடுக்கும் சட்டம் 2024-இல் திருத்தங்கள் மேற்கொண்டு, பொதுத் தேர்வு முறைகேட்டில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

2. ஸ்காட்லாந்தில் நடைபெறும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், தமிழக பளுதூக்குதல் வீரர் ராஜா முத்துப்பாண்டி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

i. கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற ஆடவர் 65 கிலோ எடைப் பிரிவுக்கான பளுதூக்குதலில் ராஜா முத்துப்பாண்டி களம் கண்டார். ஸ்னாட்ச் பிரிவில் 126 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 160 கிலோ என, மொத்தமாக 286 கிலோ எடையைத் தூக்கி ராஜா 2-ஆம் இடம் பிடித்தார்.

ii. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் முதல்முறையாகக் களம் கண்ட ராஜா முத்துப்பாண்டி, அதிலேயே பதக்கம் வென்று அசத் தியிருக்கிறார். சர்வதேச அரங்கில் ராஜா முத்துப்பாண்டி வென்றுள்ள 2-ஆவது பதக்கம் இதுவாகும். இதற்கு முன், 2025 காமன்வெல்த் சாம்பியன்ஷிப்பிலும் அவர் வெள்ளி வென்றிருக்கிறார்.

3. தமிழக அரசின் வருவாயைப் பெருக்க பொருளாதார நிபுணரும், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் பொருளாதார ஆலோசனை கவுன்சிலின் உறுப்பினருமான மான்டேக் சிங் அலுவாலியா தலைமையில் குழுவை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அரசாணையின் விவரம்:

i. கடந்த ஜூன் மாதம் தமிழக அரசின் நிதிநிலை குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை, வருவாயைப் பெருக்கவும், நிர்வாக சீர்திருத்தம் செய்யவும் பெரிதும் உதவுகிறது.

ii. ஜிஎஸ்டி, மதிப்புக் கூட்டு வரி, கலால் வரி மூலம் பெறப்படும் வருவாய்

குறைந்து வருவது தெரியவந்தது. இந்த வருவாய் குறைபாட்டைத் தீர்க்க ஊழலைத் தடுக்கும் வகையில் நீண்ட கால சீர்திருத் தங்களும், அரசு வளங்களை உரிய வகையில் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

iii. ஆகையால், தமிழ்நாட்டின் மாநில வருவாயைப் பெருக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து அளிக்க மத்திய திட்டக் குழுவின் முன்னாள் தலைவரும் பொருளாதார நிபுணருமான மான்டேக் சிங் அலுவாலியா தலைமையில் 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் தேசிய பொருளாதார ஆராய்ச்சி கவுன்சிலின் தலைமைப் பேராசிரியர் கே.பி. கிருஷ்ணன், வரித் திட்டங்களின் நிபுணர் அரபிந்த் மோடி, மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தின் முன்னாள் தலைவர் நஜீப்ஷா,தமிழக அரசின் நிதிச் செயலர் எம்.ஏ.சித்திக், சென்னை வளர்ச்சிக்கான ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் எம்.சுரேஷ்பாபு ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

iv. இந்தக் குழுவினர், மாநிலத்தில் வருவாய் ஆதாரங்களைப் பெருக்க, வழிமுறைகளை ஆராய்ந்து தமிழக அரசுக்குப் பரிந்துரைகளை வழங்குவர். வரி மற்றும் வரியில்லா வருவாயை அதிகரிக்க கொள்கை மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை அரசுக்கு வழங்குவர்.

v. மேலும், மாநிலத்துக்குத் தேவையான புதிய வருவாய் ஆதாரங்களை அடையாளம் காணுதல், வரி ஏய்ப்பு, நிர்வாக செயல்திறனில் உள்ள குறைபாடுகளை சரி செய்யும் நடவடிக்கைகள், மதுபானம் மீதான ஒழுங்கு முறை மற்றும் வரிவிதிப்பு கொள்கையில் மாற்றங்களைச் செய்து அதில் கிடைக்கும் | வருவாயை அதிகரிப்பதற்கான வழிகளையும் பரிந்துரைப்பர்.

vi. இந்தக் குழு, தமிழக அரசிடம் மூன்று மாதகாலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. சீனாவில் நடைபெறும் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் ஈஷா சிங் தங்கம் வென்று அசத்த, ஒலிம்பிக் பதக்க வீராங்கனை மனு பாக்கர் வெண்கலப் பதக்கம் வென்றார்.

i. மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவு இறுதிச்சுற்றில், ஈஷா சிங் 40 புள்ளிகளுடன் முதலிடம் பிடிக்க, மனு பாக்கர் 28 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்தார்.

5. பளுதூக்குதலில் மகளிருக்கான 53 கிலோ எடைப் பிரிவில், ஞானேஸ்வரி யாதவ்

199 கிலோ எடையைத் தூக்கி வெள்ளி வென்றார். ஸ்னாட்ச் பிரிவில் 88 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 111 கிலோவை அவர் வெற்றிகரமாகத் தூக்கினார். பளு தூக்குதலில் பதக்கம் வென்ற 2- ஆவது இந்திய வீராங்கனை ஞானேஸ்வரி ஆவார். முதல் வீராங்கனை மீராபாய் சானு.

i. நைஜீரியாவின் ஆனோம் ஆமோலோலா டிடி 206 கிலோவை தூக்கி (93+113) காமன்வெல்த் போட்டி சாதானையுடன் தங்கம் வென்றார். கனடாவின் ரெபெகா குருக்ஸ் 178 கிலோவுடன் (83+95) வெண்கலம் பெற்றார்.

6. பளுதூக்குதலில் மகளிருக்கான 58 கிலோ எடைப் பிரிவில், இந்தியாவின் பிந்தியாராணி தேவி மொத்தமாக 199 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கம் பெற்றார்.

7. ஹாக்கி இந்தியா தேசிய ஜூனியர் ஆடவர் சாம்பியன்ஷிப் கோவையில் செவ்வாய்க்கிழமை (ஜூலை 28) தொடங்கி வரும் ஆக. 8-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

i. ஹாக்கி இந்தியா தலைவர் - திலிப் டிர்கே

8. பரிசோதனை முறையில் பாலிமரில் கரன்சி அச்சிடும் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி முன்வைத்துள்ளது என்று நாடாளுமன்றத்தில் மத்திய நிதித்துறை இணையமைச் சர்பங்கஜ் சௌதரி தெரிவித்தார். நிதித்துறை தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

i. பரிசோதனை முறையில் பாலிமரில் அச்சிடப்பட்ட ரூ.10, ரூ.20 நோட்டுகளை வெளியிடும் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி முன்வைத்துள்ளது. மொத்தம் 100 கோடி என்ற எண்ணிக்கையில் இந்த நோட்டுகள் அச்சிடப்பட இருக்கின்றன.

ii. பரிசோதனை முயற்சி வெற்றி பெற்றால் பாலிமரில் ரூபாய் நோட்டுகளை அச்சிடுவது விரிவாக்கப்படும். இத்திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஏனெனில், காகிதத்தை விட பாலிமர் பல்வேறு வகையில் மேம்பட்டதாக இருக்கும் என்றார்.